www.padippakam.com

# பெண்கள் காப்பகம்



இலங்கை குடும்ப சேவைகள் சங்கம்
ரொறன்ரோ பெரும்பாகம்
கனடா

படிப்பகம்

www.padippakam.com

வெளியீடு:

இலங்கைக் குடும்ப சேவைகள் சங்கம்
ரொறன்ரோ பெரும்பாகம் - கனடா
421 புளோர் வீதி - கிழக்கு, அறை இல: 205
ரொறன்ரோ, ஒன்ராறியோ
M4W 3T1

முதற்பதிப்பு: 1995
எழுதியவர்: கலாநிதி பார்வதி கந்தசாமி
அட்டைப்படம்: பாலா

This brouchure was made possible through
a generous grant from
Ontario Women's Directorate.

**Published by:**

**Sri Lanka Family Services of Greater Toronto**
**421 Bloor Street, East, Suite 205**
**Toronto, Ont.**
**M4W 3T1**

படிப்பகம்

www.padippakam.com

# பொருளடக்கம்


அறிமுகம் . . . . . . 1

காப்பகம் என்றால் என்ன? . . . . 2

பெண்கள் துன்புறுத்தப்படுதல் . . . 3

காப்பகங்களின் நோக்கம் . . . 4

காப்பகங்கள் வழங்கும் சேவைகள் . . 4

காப்பகத்திற்குச் செல்லும்போது செய்ய வேண்டியவை 5

துன்புறுத்தியோர் மீதான சட்ட நடவடிக்கை . 6

காப்பக ஆலோசகர்கள் . . 7

காப்பகங்களில் அனுமதிக்கப்படாதவை . . 8

காப்பக வசதிகள் . . . . 8

காப்பகங்களை அணுகும் முறை . . 9

மொழி பெயர்ப்பாளர் சேவை . . . 10

பெண் ஆலோசகருடன் தமிழில் தொடர்பு கொள்ளக்கூடிய நிறுவனங்களில் சில . . . . 11

ஆபத்துக்கால தொலைபேசித் தொடர்புகள் . 12

வதிவிடம் தொடர்பான தகவல்கள் . . 13

ஒன்ராறியோவிலுள்ள காப்பகங்கள் . . 14


படிப்பகம்

www.padippakam.com

# அறிமுகம்

கனடாவில் வாழும் தமிழ்ச் சமூகத்தில் பெண்கள் உடலியல்ரீதியாகவும், உளவியல்ரீதியாகவும் துன்புறுத்தப்படுதல் அதிகரித்துக் கொண்டே வருகின்றது. "கணவனே கண் கண்ட தெய்வம்", "கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருசன்" என்ற நம்பிக்கையில், தனக்கு ஏற்படுத்தப்படும் இன்னல்களையும், இடையூறுகளையும் பிறருக்குக் காட்டிக் கொள்ளாது நடப்பது தமிழ்ப் பெண்கள் மரபாக இருந்து வந்துள்ளது. "பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்தல்" என்ற பழமொழிக்கு அமைய எமது சமூகம் துன்புறுத்தப்படும் பெண் மீதே குற்றம் காண்கின்றது. இத்தகைய நிலை மாற்றப்பட வேண்டும். "பெண்புத்தி பின்புத்தி" என்ற பழமொழியைச் சாதகமாகக் கொண்டு ஆண்கள் பலர் பெண்களை மதிப்பதில்லை. பெண்களைத் துன்புறுத்துபவர்கள் பலரெனினும், துன்புறுத்தலுக்குள்ளாகும் பெண்களில் கணவனால் துன்புறுத்தப்பட்டவர்களே எண்ணிக்கையில் அதிகமானவராவர். பெண்களைத் துன்புறுத்தும் கணவர் தமது குழந்தைகளையும் உடல் - உளத் துன்புறுத்தல்களுக்கு ஆளாக்குகின்றனர். அத்துடன் தாய்மார் துன்புறுத்தலுக்கு உள்ளாகும்போது குழந்தைகள் உளவியல்ரீதியில் பாதிப்படைகின்றனர்.

இத்தகைய துன்புறுத்தல்களைச் சகிக்க முடியாத பெண்கள் தற்கொலையிலும், தற்கொலை முயற்சியிலும் ஈடுபடுவது எமது தமிழ்ப் பெண்களிடையே இங்கும், எமது தாயகத்திலும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றது. தாயகத்தில் "பொலிடோல்" போன்ற நச்சுத் திரவங்கள் இதற்காகப் பயன்படுத்தப்பட்டன. ஆனால் கனடாவில் உயர்ந்த மாடிவீடுகளில் இருந்து குதித்துத் தற்கொலை செய்து கொள்கின்றார்கள். அன்பும் ஆதரவும் கிடைக்கும் இடங்களும், உள்ளங்களும் தற்கொலையைத் தடுக்க உதவுகின்றன. அவர்கள் தனிமனிதர்களாக, சமூகத்தில் இலைமறைகாய்களாக இருப்பதால் ஆபத்து நேரிடும் வேளைகளில் தற்கொலை செய்வோரைக் காப்பாற்ற முடிவதில்லை. இத்தகைய ஆபத்துக்கள் திடீரென ஏற்படுபவை. இந்த இடர்களில் இருந்து கதியற்ற பெண்களையும் அவர்களது குழந்தைகளையும் அரவணைத்துப் பாதுகாக்கக் கனடாவில் பெண்களுக்கென காப்பகங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்பதைப் புதியகுடிவரவாளர்களாகிய நாம் அறிந்து, அவற்றைத் தக்க நேரங்களில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com

# காப்பகம் என்றால் என்ன?

பெண்களைத் துன்புறுத்தும் ஆண்களின் கொடிய துன்புறுத்தல்களிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளுவதற்கும் அத்துன்புறுத்தகளிலிருந்து தற்காலிகத் தீர்வைத் தரும் பாதுகாப்பிடமாகவும் ஏற்படுத்தப்பட்டதே துன்புறுத்தப்பட்ட பெண்களுக்கான காப்பகம். இது பெண்களினது உரிமைகளைப் பாதுகாக்கும் நிறுவனமாகவும் அவர்களுக்காக வாதாடும் அமைப்பாகவும் செயற்படுகின்றது. இன்றைய சமூக அமைப்பில் மனஉளைச்சல் சார்பாகத் தோன்றும் பல்வேறு பிரச்சனைகளுக்கு மாற்றீடாக காப்பகம் அமைகின்றது.

துன்புறுத்தலுக்கு உள்ளாகி வீட்டைவிட்டு வெளியேறிய பெண், எவருடன் தனியாகத் தங்கலாம்? தான் எங்கே மறைவாகத் தங்கியிருக்கின்றேன் என்பதைத் தன் துணையாளருக்கு எவர் கூறமாட்டார் என நினைக்கின்றாளோ, அத்தகைய ஆட்களும் பாதுகாப்பிடமும் பொருந்திய பாதுகாப்பு நிலையமே பெண்கள் காப்பகமாகும்.

தம்முடன் கூடவே இருந்து துன்புறுத்தியவர்களை விட்டுவிலகிய பெண்கள் இந்தக் காப்பகங்களில் தங்கியிருப்பர். இக்காப்பகங்கள் இப்பெண்ணுக்குப் பாதுகாப்பையும், சாதகமான வாழ்க்கைச் சூழலையும் ஏற்படுத்திக் கொடுக்கும். இக்காப்பகங்களில் பிள்ளைகள் பராமரிப்புச் செயல்த்திட்டம், உதவிக்குழு, ஆலோசனை வழங்கும் சேவை என்பன அமைந்திருக்கும். இப்பெண்களில் எவரும் இக்காப்பகங்களில் தங்குவதற்கோ, அதன் ஏனைய சேவைகளைப் பெறுவதற்கோ பணம் செலுத்தத் தேவையில்லை. துன்புறுத்தப்பட்ட பெண்களுக்கு இரகசியமான முறையில் தற்காலிக பாதுகாப்பு வழங்கும் செயல்முறையில் காப்பகம் சமூகத்தில் சிறந்து விளங்குகின்றது. ஆணின் துன்புறுத்தலுக்கும், மனிதவதைக்கும் ஆளாகி, அக்கொடுமைகளிலிருந்து தப்பிவரும் பெண்களுக்குப் பாதுகாப்பு உளவியல் ரீதியான உதவிகள் முதலான பராமரிப்புகள் தேவைப்படுகின்றன.

துன்புறுத்தப்பட்ட பெண்களுக்கான காப்பகங்கள் முதன் முதலில் 1971ல் இங்கிலாந்திலும் அதன் பின்பு வட அமெரிக்காவிலும் நிறுவப்பட்டன. கடந்த கால் நூற்றாண்டு காலமாகத் துன்புறுத்தப்பட்ட பெண்களுக்குப் புகலிடமும், பாதுகாப்பும், நல்வாழ்வும் வழங்கும் நிறுவனமாக இக்காப்பகங்கள் செயற்ப்பட்டு வந்துள்ளன.


படிப்பகம்

www.padippakam.com

இத்துறை ஆய்வாளர் சிலரது கருத்துப்படி காப்பகங்களில் தங்கியிருந்த பெண்களில் *2/3* பகுதியினர் தம் துணைவருடன் சுமுகமான முறையில் திரும்பிச் சென்றுள்ளனர். துன்புறுத்தப்பட்டமைக்கான காரணங்களை ஆராய்ந்தபோது, இப்பெண்களில் பெரும்பாலானோரின் நிதிநிலைமை, தொழில் நிலைமை காரணமாகவே தாம் துன்புறுத்தப்பட்டு உள்ளமையும், அதற்கு அடுத்தபடியாகத் தகாத பாலியல் தொடர்புகள் காரணமாக அமைந்தமையும் அறியப்பட்டுள்ளன.

## பெண் துன்புறுத்தப்படுதல்

மனைவி துன்புறுத்தப்படல் பொதுவானதாகவும், பாரிய பிரச்சனைக்குரிய விடயமாகவும் கணிக்கப்பட்டுள்ளது. இன்று ஒவ்வொரு பத்துப் பெண்களிலும் 6 தொடக்கம் 10 வரையிலான பெண்கள் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள். உளவியலாளர்களின் கருத்துப்படி பெண்கள் தாம் ஆண்களுக்குப் பணிந்துபோகும் தன்மையினாலும், தங்களைப்பற்றிக் குறைவாக மதிப்பிடும் போக்கினாலும், துன்புறுத்தல்களைச் சகித்துக் கொள்ளும் தன்மையினாலுமே தொடர்ச்சியான துன்புறுத்தல்களுக்கும், வதைகளுக்கும் மீண்டும் மீண்டும் ஆளாகி வந்திருக்கின்றார்கள். சமூகப் பெறுமதிகள், குடும்ப அடக்குமுறைகள், பெண்கள் பற்றிய விழுமியங்கள் என்பன பெண் அடக்குமுறைக்கும், பெண்வதைக்களுக்கும் அடிப்படையாக இருந்து வந்துள்ளன.

ஒன்ராறியோ மாகாணத்தில் வாழும் 25 வீதமானோர் கனடாவிற்குப் புதிதாக வந்து குடியேறியவர்களாவர். இவர்களில் தமிழ்ப் பெண்களின் எண்ணிக்கையும் கணிசமானதாகும். புதியதொரு நாட்டில் முற்றிலும் வேறுபட்ட பண்பாட்டுச் சூழலில் வாழும் பெண் ஒருத்தி தன் கணவனால் அல்லது துணைவரால் துன்புறுத்தப்பட்டு, வதைகளுக்கு ஆளாகும் போது அப்பெண் அனுபவிக்கும் மனஉளைச்சலும், மனப்பயமும், வேதனைகளும் அளவற்றனவாகும். இத்தகைய சந்தர்ப்பங்களில் இப்பெண்களுக்கு உதவிக்கரம் நீட்டி, பாதுகாப்பு அளிக்கும் நிறுவனமே இக்காப்பகமாகும்.


படிப்பகம்

www.padippakam.com

# காப்பகங்களின் நோக்கம்

துன்புறுத்தப்பட்ட பெண்களுக்கு இக்காப்பகங்கள் தற்காலிக பாதுகாப்பும், பராமரிப்பும் அளிப்பதுடன் அவர்களின் உரிமைகள் பற்றிய கல்விப் போதனை, தனி ஆளுமையை விருத்தி செய்தல், பெண்கள் தங்களைப் பெறுமதி வாய்ந்தவர்களாக மதிக்க உதவி செய்தல், கூட்டுமுயற்சி, பெண் விடுதலை முயற்சிகளில் ஈடுபடுதல் ஆகிய நடவடிக்கைகளிலும் பங்களிப்புச் செய்கின்றன. துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டு காப்பகங்களில் தங்கியிருக்கும் பெண்களின் துன்புறுத்தல்கள், அவர்கள் சார்ந்த கலாசார பொருளாதார சமூகக்கட்டமைப்புகளுக்கு அமைய வேறுபட்டிருப்பினும், ஆண்களின் துன்புறுத்தலுக்கு சாவுமணி அடிக்க வேண்டியது மனித உரிமை பேணும் நடவடிக்கையாகும். எந்த ஓர் உயிரும் சுதந்திரமாக வாழ வேண்டியது அவசியம். இவ்வாறு பல்வேறு நிலைகளில் துன்புறுத்தலுக்கு உள்ளான பெண்கள், அவர்களது துணைவர்களுக்கு அளிக்கப்பட்ட தகுந்த ஆலோசனைகள் மூலம் நன்மை அடைந்துள்ளனர்.

## காப்பகங்கள் வழங்கும் சேவைகள்

- 24 மணி நேரமும் செயற்படுதல்.
- துன்புறுத்தப்பட்ட பெண்களுக்கு தற்காலிக பாதுகாப்பிடம் வழங்குதல்.
- ஆலோசனைகள் வழங்குதல்.
- சட்டவிடயம், வதிவிடம் தொடர்பான உதவிகள் அளித்தல்.
- துன்புறுத்தப்பட்ட பெண்களையும் அவர்கள் தம்முடன் அழைத்து வந்திருக்கும் குழந்தைகளையும் பராமரித்தல்.
- சட்டம் அல்லது ஆலோசனைகளைப் பெறுதல் தொடர்பான சந்திப்பு வேளைகளில் பிள்ளைகளைப் பராமரிப்பதற்குரிய வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல்.
- பாதுகாப்பகங்களில் வதியும் பெண்களின் தகவல்களை அந்தரங்கமாகப் பேணுதல்.


படிப்பகம்

www.padippakam.com

# காப்பகத்திற்குச் செல்லும் போது செய்ய வேண்டியவை

பின்வரும் முக்கியமான பொருட்களை எடுத்துச் செல்ல முயற்சிக்க வேண்டும்.

- சுகாதார அட்டை, வங்கி அட்டைகள், கடவுச்சீட்டு, பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், சமூகக் காப்புறுதி அட்டை.
- பணம், வங்கிப்புத்தகம், நகைகள்.
- உறுதிகள், ஈட்டுறுதிகள், வருமானவரி செலுத்துகைப் பத்திரங்கள், பிணைப்பத்திரங்கள்.
- வீட்டுத்திறப்புக்கள், மோட்டார் வாகனத்திறப்புகள்.
- உமது பிள்ளைகளுக்கு மிகவிருப்பமான விளையாட்டுப் பொருட்கள்.
- உடுப்புகள்.

உங்களுக்குத் தேவையான பொருட்களை எடுத்துச் செல்ல நேரம் போதாதிருக்கலாம். உங்களுக்குரிய தனிப்பட்ட பொருட்களை எடுத்துவர உங்கள் வீட்டிற்கு நீங்கள் மீளச் செல்ல வேண்டுமானால், பொலிசாருடன் தொடர்பு கொண்டு நீங்கள் செல்லும் நேரத்தைப் பொலிசாருக்கு அறிவித்து அவர்களை, அங்கே பாதுகாப்புக்காக வரவழைக்கலாம்.

**குறிப்பு:** பெரும்பாலும் காப்பகங்களில் வெற்றிடங்கள் இருப்பதில்லை. அதனால் அங்கு செல்ல முன்பு தொலைபேசி மூலம் விபரங்களை விசாரித்து அறிந்து கொள்ளவும்.



படிப்பகம்

www.padippakam.com

# துன்புறுத்தியவர் மீதான சட்டநடவடிக்கை

பெண்ணைத் துன்புறுத்தியவரைப் பொலிஸார் கைது செய்யலாம். அது உரியகாலத்தில் நடைபெறாவிட்டால் அதற்குரிய நடவடிக்கைகளைப் பெண்ணே மேற்கொள்ளலாம். அருகிலுள்ள சமாதான நீதிபதியிடம் சென்று, மாகாண குற்றவியல் நீதிமன்றத்தில் தம்மைத் துன்புறுத்திவருக்கு எதிராக முறைப்பாடு செய்யலாம். இதனை நீங்கள் செய்ய விருப்பம் தெரிவித்தால் இக்காப்பகங்கள் உங்களுக்கு உதவி செய்யும்.

பொலிஸாரால் துணைவர் கைது செய்யப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்டால், அப் பிணைபற்றிய விபரங்களைப் பொலிஸாரிடம் கேட்டறிந்து கொள்ளலாம். பிணையின் ஒழுங்குவிதிகளைப் பிணையிலுள்ளவர் மீறினால், அதனைப் பொலிஸாருக்கு உடனே அறிவிக்கலாம். பொலிஸார் அவரை மீண்டும் கைது செய்து பெண்ணுக்குப் போதிய பாதுகாப்பு வழங்குவர். தொடர்ந்தும் அவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க விரும்பினால் காப்பகம் சட்ட உதவிப் பிரிவுடன் தொடர்பு கொண்டு வேண்டிய வசதிகளைச் செய்து தர உதவும்.

## கீழ் குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக சட்ட ஆலோசனை பெறலாம்

- சமாதானப் பத்திரம் தடை ஆணை
- பிரிந்திருத்தல்
- திருமணமுறிவு
- பிள்ளைகளைப் பராமரிக்கும் உரிமை.
- சொத்துப் பிரிவினை
- உடற் காயங்களுக்கு நஷ்டஈடு
- பராமரிப்பு நிதி


படிப்பகம்

www.padippakam.com

# காப்பக ஆலோசகர்கள்

துன்புறுத்தப்பட்ட பெண்களுக்கான காப்பகங்களில் உள்ள ஆலோசகர்கள் மட்டுப்படுத்தப்பட்ட ஆலோசனைகளை வழங்குவார்கள். இக் காப்பகங்களில் உள்ள ஆலோசகர்களின் ஆலோசனைச் சேவைகள் 24 மணித்தியாலமும் கிடைக்கும்.

பாதுகாப்பகங்களில் தங்கியிருக்கும் பெண்கள், விவாகமான நிலையிலேயே இருத்தல், மணமுறிவைச் செய்தல் அல்லது தனியாக இருத்தல் என்ற முடிவுகளில் என்ன முடிவை எடுக்கின்றார்களோ அந்த முடிவை ஆதரித்தே அங்குள்ள ஆலோசகர்கள் ஆலோசனை வழங்குவர். இவ்வாலோசகர்கள் குடிவரவு, குழந்தைகளைத் தற்காலிகமாக முழுப் பொறுப்பேற்றல் வீட்டிலுள்ள உடைமைகளைப் பாதுகாப்பாக எடுத்து வருதல், வாடகை குறைந்த ரொறன்ரோ பெரும்பாக குடியிருப்பு வீடுகளைப் பெறுதல் முதலான விடயங்களிலும் ஆலோசனைகளை வழங்கி வழிகாட்டுவர். அவர்கள் குழந்தைகளுக்கோ, தாய்மாருக்கோ ஆழமான ஆலோசனை தேவைப்படின் அவற்றை வழங்கும் நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு வேண்டிய உதவிகள் கிடைக்கச் செய்வர்.

குழந்தைகளுடன் வேலை செய்வதற்கென்று பயிற்சி பெற்ற ஆலோசகர்களும், காப்பகத்திலுள்ள குழந்தைகளுக்கு உதவியாகச் செயற்படுவர். இவர்களுடைய முக்கிய ப்ணி, இக்குழந்தைகளுடைய பிரச்சினைகளை இனங்கண்டு, அவற்றுக்கான சமூகமாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகும். குழந்தைகளுக்கு அறிவு புகட்டுதல், பாடசாலையில் இடம் எடுத்துக் கொடுத்தல், பாடங்களில் உதவி செய்தல், நீச்சல், இடம் பார்த்தல் முதலியவற்றிற்கு அழைத்துச் செல்லல் முதலான விடயங்களையும் இந்த ஆலோசகர்கள் செய்வர். பிரச்சினைக்குரிய குழந்தைகளை இனம் கண்டு அவர்களை வழி நடத்த வேண்டிய திட்டங்களையும் வகுப்பர்.


படிப்பகம்

www.padippakam.com

# காப்பகங்களில் அனுமதிக்கப்படாதவை

பாதிக்கப்பட்ட பெண்கள் தங்கியிருக்கும் காப்பகங்களில் ஆயுதங்கள், குடிவகை என்பன அனுமதிக்கப்படுவதில்லை. சிகரெட் புகைபிடிப்பவர்களுக்குத் தனியான இடம் உண்டு. நிற - இன - மத துவேஷம் அனுமதிக்கப்படுவதில்லை. வெள்ளையர், கறுப்பர், மஞ்சள் நிற இனத்தவர், வலது குறைந்தோர் என்ற பாகுபாடின்றி அனைவரும் சமமாகவே மதிக்கப்படுவர்.

ஆடவர்கள் எவரும் பெண்களைப் பார்ப்பதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. தாம் இருக்கும் காப்பகத்தின் விலாசம், தொலைபேசி இலக்கம் போன்றவை எவருக்கும் கொடுக்க வேண்டாமென துன்புறுத்தலுக்குள்ளாகி வந்த பெண்கள் கேட்கப்படுவர். காப்பகங்கள் பாதுகாப்பு காரணமாகப் பெயர்ப் பலகையுடன் இயங்குவதில்லை.

# காப்பக வசதிகள்

பாதுகாப்பகங்களில் வசதிக்கேற்ப தங்கும் அறை வசதிகள் வேறுபடும். சிலசமயம் குடும்பத்தினர் ஒரே அறையில் தங்க அனுமதிக்கப்படுவர். சில சந்தர்ப்பத்தில் ஒரு அறையை வேறு பெண்களுடனோ, பிள்ளைகளுடனோ பகிர்ந்து கொள்ளவேண்டியிருக்கும். இடநெருக்கடி காரணமாக மேல்த்தட்டு, கீழ்த்தட்டுகளாக அமைந்த கட்டடில்களும் அமைக்கப்பட்டிருக்கும். ஒரு ஆளுக்கு ஒரு கட்டில் என்ற அடிப்படையில் படுக்கைகள் வழங்கப்படும். படுக்கைவிரிப்பு முதல் துணிகழுவுதல் வரையிலான வசதிகள் இங்கே உள்ளன.

காப்பகப் பெண்களது தேவைக்கு ஏற்றவாறு விசேட உணவு செய்வதற்கு அனுமதி கூடியவரை வழங்கப்படும். சில காப்பகங்களில் பெண்கள் தவணை முறையில் வேலை செய்வதற்கு பணிக்கப்படுவர். கூட்டுதல், சமைத்தல், கழுவுதல் போன்ற பல வேலைகள் அமையும். சில காப்பகங்களில் கிழமைநாட்களில் சமைப்பதற்கு என ஆட்கள் அமர்த்தப்படுவதும் உண்டு. பொது அறை, குழந்தைகள் விளையாட்டு அறை என்ற தனி அறைகளும் உள.


படிப்பகம்

www.padippakam.com

# காப்பகங்களை அணுகும் முறை

துன்புறுத்தப்பட்ட பெண்களுக்கு உதவும் தொலைபேசி இலக்கம் 863-0511 தனியாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் ( 24மணித்தியாலமும் ) துன்புறுத்தப்பட்ட பெண்கள் (எம்மொழியிலும்) குறிப்பாக தமிழ்ப் பெண்கள் தமிழிலே தமக்குத் தேவையான சேவைகளைப் பெற்றுக் கொள்ளலாம். "எமேஜன்ஸி -தமிழ் ஸ்பீக்கிங்" எனக்கூறி உதவியைத் தமிழில் பெறலாம்.

தன் கணவனால் துன்புறுத்தப்பட்டு பயமுறுத்தலுக்கும், வேதனைகளுக்கும் உள்ளாக்கப்பட்ட ஒரு பெண், தனக்குரிய காப்பகம் ஒன்றைத் தேடிக் கொள்வதற்கு வழிவகைகள் உள்ளன. தொலைபேசி வழிகாட்டியில் **சிற்றிகோல், ரவுன்கோல்,** அல்லது **மனைவியைத் துன்புறுத்தல்** என்ற தலைப்பிற்குரிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு தனக்கு அண்மையிலுள்ள அல்லது தனக்குப் பாதுகாப்பானதெனக் கருதும் காப்பகத்திற்குச் சென்று புகலிடம் பெறலாம்.

**தொலைபேசி இலக்கம் 863-0511 இதன் மூலம் பெறக்கூடிய சேவைகள்:**

- ஆபத்துக்கால ஆலோசனை.
- உணர்வு பூர்வமான ஆதரவு.

- **பின்வரும் வழிகாட்டல்கள்:**
  - காப்பகம்.
  - சட்டசேவைகள்.
  - வதிவிடம்.
  - ஆலோசனை பெறல்.
  - நிதியுதவி.
  - மொழிபெயர்ப்பாளர்.
  - பொதுவான சட்டத் தகவல்கள்

துன்புறுத்தலுக்கு ஆளாகி ஆபத்தான நிலையில் வீட்டைவிட்டு வெளியேறும் பெண்ணொருத்தி தான் காப்பகத்திற்குச் சென்றடைவதற்குப் பணம் இல்லாவிட்டால் காப்பகத்துடன் தொடர்பு கொண்டு, அவர்கள் மூலமாக வாடகைக் கார் ஒன்றினைப் பெற்றுக் கொள்ளலாம்.


படிப்பகம்

www.padippakam.com

# மொழிபெயர்ப்பாளர் சேவை

புதிதாகக் குடிபெயர்ந்த பெண்களில் பெரும்பாலானோர் தொடர்புகள் மேற்கொள்ள முடியாதவாறு மொழி ஒரு பெரும் தடையாக உள்ளது. அவர்கள் பெரும்பாலும் பிறரில் தங்கியிருக்க வேண்டியுள்ளது. இப்பெண்கள் துன்புறுத்தலுக்கு உள்ளாகும்போது உதவிக்கரம் நீட்டுவோருடன் தொடர்பு கொள்ள முடியாத பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டு மனஉளைச்சலுக்கும் ஆளாகுகின்றனர்.

அத்தகையோருக்கு உதவும் பொருட்டே மொழிபெயர்ப்பாளர் சேவை அமைக்கப்பட்டுள்ளது. நீங்கள் மொழி பெயர்ப்புக்காகத் தொடர்பு கொள்ள வேண்டியது:-

☞ **றொறன்ரோ பெரும்பாகக் கலாசார மொழிபெயர்ப்பாளர் சேவை – 290-5626.**

காப்பகங்களில் கடமையாற்றும் ஆலோசகர்கள் தமிழில் உங்களுடன் உரையாட முடியாது போனால் தமிழ்மொழி பேசும் மொழி பெயர்ப்பாளர் ஒருவரை உங்களுக்கு ஒழுங்கு செய்து தருவார்கள்.

அவசரகால தேவைகளுக்காக நீங்கள் **911** இலக்கத்துடன் தமிழில் தொடர்பு கொள்ளும் போது, உங்களுக்கு ஆங்கிலம் தெரியாவிட்டால் தொடர்ந்து "தமிழ்", "தமிழ்", "தமிழ்" என்றே கூறுங்கள். அவர்கள் உடனே தமிழ் பேசும் மொழி பெயர்ப்பாளர் ஒருவரைத் தொலைபேசியில் தொடர்பு படுத்திவிடுவார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

## பெண் ஆலோசகருடன் தமிழில் தொடர்பு கொள்ளக்கூடிய நிறுவனங்கள் சில

துன்புறுத்தப்பட்ட பெண்களுக்கான கனடா நிலையம். (416) 480-0489

தோண்கிளிவ் அயலவர் சேவைகள். . . . . . . (416) 421-3425

இந்திய வானவில் சமூக சேவைகள் - பீல் . . . (905) 275-2369

பிளமிங்ரன் அயலவர் சேவைகள் . . . . . . . (416) 424-2900

சேக்கம் இலங்கைச் சிறுபான்மையினருக்கு
உதவும் கழகம் (416) 287-3975

தமிழ் ஈழச்சங்கம் - பிறோட் வியூ . . . . . . . (416) 463-7647
- ஸ்காபரோ . . . . . . (416) 757-6043
- லான்ஸ்ரவுண் . . . . . . (416) 537-5678

கனடா இளைஞர் வேலைவாய்ப்பு நிறுவனம். . . . (416) 491-7000

தென் ஆசிய குடும்ப உதவி சேவை . . . . . . .(416) 281-5469

தென் ஆசிய பெண்கள் நிலையம் . . . . . . . (416) 537-2276

சர்வதேச நெசவாளர் மகளிர் சங்கம் . . . . . . . (416) 977-1384

இலங்கை குடும்பநல சேவை (ரொறன்ரோ பெரும்பாகம் (416) 490-0276

வடயோர்க் சமூக நிலையம் . . . . . . . . . (416) 784-1219

றிவர்டேல் பெண்கள் குடிவரவாளர் நிலையம் . . . (416) 465-6021

றெபிக்கானா ஏ. வை. எஸ். ஈ. வேலைவாய்ப்பு
நிலையம் (416) 491-7000

சென்ற் யோசேப் பெண்கள் சுகாதார நிலையம் .(416)530-6850, X 3778

குடியேறிய பெண்கள் சுகாதார நிலையம் . . . . .(416) 323-9986

சென்ஜேம்ஸ் டவுண் சமூக சுகாதார நிலையம் . . . (416) 926-7056

பாக்டேல் சட்ட சேவை (புதன்கிழமை பகல் 2 -6மணி) (416) 531-2411

குடும்ப சேவைகள் சங்கம் . . . . . . . . . (416) 927-8500

வதைக்கு உள்ளாக்கப்பட்டோர்க்கான நிலையம் (416) 480-0489


படிப்பகம்

www.padippakam.com

## ஆபத்துக் காலத் தொலைபேசித் தொடர்புகள்

பொலிஸ், அம்புலன்ஸ் (குரல் அல்லது ரிடிடி) . . . . . . 911

- 140 மொழிகளில் மொழிபெயர்ப்பு வசதிகள்.
- அவசரகாலச் சேவையற்ற விடயங்களுக்கான பொலிஸ் தொலைபேசி அழைப்பு இல: . . 324-2222
  ரிடிடி . . . . . . . . . . . . . . . . . 922-1333
  (24 மணித்தியால சேவை)
- துன்புறுத்தப்பட்டபெண்களுக்கான தொலைபேசி 863-0511
  ரிடிடி . . . . . . 516-9738
- ரொறன்ரோ பெரும்பாகம் -
  சமூகத்தகவல் நிலையம் (24 மணித்தியாலம்) 392-0505
  ரி.டி.டி . . . . . . . .392-3778

தொலைபேசிப் பராமரிப்புத் தொடர்பு நிலையம் - பிரம்ரன் (905) 459-7777

இரட்சணியசேனை - தற்கொலைத்தடுப்பு, அவசரகால ஆலோசனை வழங்குதல் (416) 285-0100

ஸ்கார்பரோ ஆபத்துக்கால நிலையம் . . . . (416) 751-4889

எற்ரோப்பிக்கோ தொலைபேசிப் பராமரிப்பு . . . . (905) 731-1212

தென்யோர்க் பிரதேசத் தொலைபேசிப் பராமரிப்பு . . .(905) 737-8377

வை. டபிள்யூ. சி. ஏ. பெண்கள் காப்பகம், ரொறன்ரோ(416) 693-7342


படிப்பகம்

www.padippakam.com

## வதிவிடம் தொடர்பான தகவல்கள்

### வதிவிடம்

24 மணிநேரமும் பெண்களுக்கான வதிவிடம் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்ள பின்வரும் இலக்கத்தில் தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம் . . . (416) 392-0505
(416) 863-0511

தனியார் இல்லங்கள் அல்லது தொடர்மாடி வீடுகளில் அவசரகாலத் தேவைக்காக் குறுகியகாலம் தங்குதலுக்கான தொடர்புகள்.

- ஏஜாக் - பிக்கரிங் பாதுகாப்பு வாழ்க்கைச் சூழல் (அப்பிள் ஹவுஸ்) . . . . . . . . (905) 427-4924

### ரொறன்ரோ பெரும்பாக விதிவிட அதிகாரசபை

குழந்தைகளுடன் தனித்து வாழும் துன்புறுத்தப்பட்ட பெண்களுக்கு மானியம், வழங்கப்பட்ட வதிவிடம் வழங்குவதில் முன்னுரிமை அளிக்கப்படும். இத்தகைய இடங்களில் சேர்ந்து கொள்ளுவதற்குத் தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்
(416) 969-6000
ரி. டி. டி (416) 969-6227


படிப்பகம்

www.padippakam.com

# ஒன்ராறியோவிலுள்ள காப்பகங்கள்

## ரொறன்ரோ பெரும்பாகம்

### ரொறன்ரோ நகர்

அன்டுயன் விடுதி ........................ (416) 920-1492
இடைவேளை இல்லம் ........................ (416) 924-1491
நெல்லி காப்பகம் ........................ (416) 461-1084
றெட்டோர் துன்புறுத்தப்பட்ட பெண்கள் காப்பகம்..(416) 462-9750
றெட்வூட் காப்பகம் ........................ .(416) 533-8538
யோர்க் பிராந்திய (ஷேர்லி சமரோ) இல்லம்...... (416) 249-7095
பெண்கள் தற்காலிக காப்பகம்,ஸ்படயினாஇல்லம் (416) 967-5227
பெண்கள் தற்காலிக காப்பகம் புளோர் இல்லம் (416) 533-1175
வை. டவ்ள்யூ. சீ ஏ. பெண்கள் காப்பகம் ..... (416) 693-7342

### ஸ்காா்பரோ

எமிலி ஸ்ரோவ் பெண்கள் காப்பகம் ........................(416) 264-4357
இல்லம் நோக்கிய பெண்கள் காப்பகம் ............ (416) 724-1316

### ரெக்ஸ்டேல்

ஏர்னெஸ்ரின் பெண்கள் காப்பகம் ........................ (416) 746-3701

### ஏற்ரோபிக்கோ

ஏற்ரோபிக்கோ பெண்கள் வதிவிடம் ........................(416) 252-5829
(416) 252-5820

### யோர்க்

வடயோர்க் பெண்கள் இல்லம் ........................ .(416) 635-9630
மஞ்சறகல் இல்லம் - (யோர்க்) ........................ (905) 727-1944
...... 1-800-263-3247
வடயோர்க் குடும்ப சேவைகள் நிலையம் ............(416) 225-1166

### மிசிசாகா

இடைக்கால நிலையம் ........................ (416) 271-1860

### சதாம்

சதாம் - கென்ற் பெண்கள் நிலையம் **(W)**....... (519) 354-6360
... 1-800-265-0598

### கேம்பிறிஜ்

குடும்ப நெருக்கடி நிலையம் ........................**(W)** (519) 653-2422


படிப்பகம்

www.padippakam.com

## பிரான்போர்ட்

நோவாவிற்றா பெண்கள் காப்பகம் ................................ (519) 752-4357
1-800-265-0764

## பிரம்ரன்

குடும்பவாழ்வு ஆதார நிலையம் ........................................(416) 451-4115
(வேலை நேரத்திற்குப் பின்பு) ...............................................(416) 451-4241

## பரி

பெண்கள், குழந்தைகள் அவசரகால நிலையம் **(W)...**(705) 728-6300
1-800-461-1716

## ஒறோறா

மஞ்சள் கல் வீடு **(W)** ..........................................................(416) 773-6481
(416) 727-1944
1-800-263-3247

## கல்ப்வ்

நெருக்கடிக்குள்ளான பெண்கள் மேரிஆன் நிலையம் (519) 836-5710
1-800-265-7233

## ஹமில்ரன்

நல்லாயர்/மர்தா இல்லம் .....................................................(416) 523-6277

துன்புறுத்தப்பட்ட குடும்பங்களுக்கான
சுவர்க்க நம்பிக்கை இல்லம் .............(416) 547-8149

இன்னாஸ்மச் இல்லம் ...........................................................(416) 529-8149

ஹமில்ரன் - வென்றவோர்த் இடைவேளை இல்லம் ......(416) 547-8484

**(W)** - கதிரைவண்டி வசதிகளுடன் கூடிய இடம்



படிப்பகம்

www.padippakam.com

We wish to thank everyone
who has contributed to the making
of this publication.

Special thanks to the
Ontario Women's Directorate
for their generous support.

Sri Lankan Family Services of Greater Toronto.

படிப்பகம்

www.padippakam.com

# கணவன் அல்லது துணைவன் அடித்துத் துன்புறுத்தினால் நீங்கள் அறிந்து கொள்ள வேண்டியவை

- நீங்கள் மாத்திரம் வன்முறைக்கு உட்பட்டவர் அல்ல.
- இது உங்களின் குற்றமல்ல.
- உங்களை மட்டுமல்ல - உங்கள் குழந்தைகளை இது உடல் - உள ரீதியில் பாதிக்கும்.
- மனைவியை அடித்தல் - துன்புறுத்தல் தவறானதாகும்.
- எந்த மதத்திலும் மனைவியைத் தாக்கும் உரிமை ஆணுக்கு வழங்கப்பட்டில்லை.
- கனடாவில் துன்புறுத்தப்பட்ட பெண்ணுக்கு அரச, சட்ட பொலிஸ் பாதுகாப்பு உண்டு.
- சட்ட ஆலோசனைகளை நாடி நடவடிக்கை எடுக்கலாம்.
- பாதுகாப்பு அகங்களை நாடலாம்.
- அடிவாங்குதலை தொடர்ந்து பொறுக்க வேண்டுமா? இரகசியமாக வைத்திருக்க வேண்டுமா?
- நீங்கள் சுதந்திரமாக வாழும் உரிமை உடையவர்கள் என்பதை மறவாதீர்கள்.
- உங்களில் அனுதாபம் உடையோரை நாடுங்கள்.
- தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுங்கள்.

**பாதுகாப்பாக விலக பாதுகாப்பகங்கள் உண்டு என்பதை மறவாதீர்கள்**

படிப்பகம்